பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 7

குகைவாசிகள் பதிப்பகப் பாதை 14

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 21

முன்னுரை 25

1 கனவின் விளக்கங்களும் அதன் வகைகளும் 31

2 நல்ல கனவின் சிறப்பு 44

- கனவில் நபி ﷺ அவர்களைப் பார்த்தவரின் சிறப்பு 48
- நபி ﷺ அவர்களைப் பார்ப்பதின் பலன்கள் 51

3 கனவின் ஒழுக்கங்கள் 54

- இத்தலைப்பு அணுகும் மூன்று முக்கிய அம்சங்கள் 54

3.1 நல்ல கனவுக்கான நல்லொழுக்கங்கள் 54

3.2. கனவு கண்டவரின் ஒழுக்கங்கள் 61

3.3. கனவுக்கு விளக்கம் கூறுபவர்களின் ஒழுக்கங்கள் 68

4 கனவுகளின் வகைகளும் அதன் விளக்கங்களும் 74

1. குர்ஆன் வழியாக வந்துள்ள கனவின் விளக்கங்கள் 75

2. ஹதீஸ்களின் வழியாக வந்துள்ள கனவுகளின் விளக்கங்கள் சில 87

3. பெயர்களின் வழியாக வந்துள்ள விளக்கங்கள் சில 104

4. கவிதைகளின் வழியாக வந்துள்ள சில விளக்கங்கள் 108

5. பழமொழிகளின் வழியாக வந்துள்ள சில விளக்கங்கள் 112

6. ஒரு வார்த்தையின் அர்த்தங்கள் வழியே சில விளக்கங்கள் 114

7. எதிர்மறை மற்றும் மாற்றிச் சொல்லல் பற்றிய விளக்கங்கள் 115

5 கனவின் பயன்களும் அதன் சட்டங்களும் 117

6 முன்சென்ற நல்லோர்களின் அபூர்வக் கனவுகள் 123

1

கனவின் விளக்கங்களும் அதன் வகைகளும்

✿

இமாம் அல்ஆலூசீ ﵀ கூறுகிறார்:

கனவுக்கு அறபியில் ருஃயா என்று சொல்லப்படும். இச்சொல் ரஆ – பார்த்தான் என்ற மூலச்சொல்லிலிருந்து வந்ததாகும். கனவு பார்க்கப்படுவதால் பார்த்தல் – ருஃயா என்ற சொல்லே கனவுக்கும் பயன்படுத்தப்படுகிறது. குர்பத் – நெருக்கம் என்ற சொல் வணக்கத்தற்கு பயன்படுத்தப்படுவதைப்போல, ஆம், ஒருவரின் வணக்கம்தானே அவரை அல்லாஹ்வின் பக்கம் நெருக்கி வைக்கின்றது.

அல்மாஜிரீ அவர்களின் வழியாக முஹ்யித்தீன் அந்நவவீ ﵀ அவர்கள் கூறுகிறார்கள்: ஒருவர் விழித்திருக்கும்போது அவரது உள்ளத்தில் சில நம்பிக்கைகளை அல்லாஹ் உருவாக்குவதுபோல அவர் உறங்கும்போதும் அவரது உள்ளத்தில் சில நம்பிக்கைகளை அல்லாஹ் உருவாக்குகிறான். அவனை ஒருவனது விழிப்போ, உறக்கமோ தடைசெய்துவிட முடியாது. இதையடுத்து அந்த நம்பிக்கைகளுக்கு அல்லாஹ் சில அடையாளங்களை ஏற்படுத்து கிறான். எவை அல்லாஹ்வின் முன்னிலையில் மட்டும் அடையாள மாக உருவானதோ அது அவனுக்கு மகிழ்ச்சியளிக்கும். எவை ஷைத்தானின் முன்னிலையில் அடையாளமாக உருவானதோ அது அவனுக்கு இடையூறு அளிக்கும்.

- முன்னது, ருஃயா – அல்லாஹ்வின் புறத்திலிருந்து ஏற்பட்ட நல்ல கனவு என்றும், பின்னது, ஹில்ம் – ஷைத்தானின் புறத்திலிருந்து ஏற்பட்ட கெட்ட கனவு என்று சொல்லப்படும்.

தீய கனவும் அல்லாஹ்வின் ஆணைப்படிதான் ஏற்படுகிறது என்றாலும், அது தீயவனின் பக்கம் இணைத்துச் சொல்லப்படு வது வழக்கமே. இப்படித்தான் நபி ﷺ அவர்களின் வாக்கியம் வந்துள்ளது:

2

நல்ல கனவின் சிறப்பு

✿

ஆயிஷா ﵂ அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது:

كَانَ أَوَّلَ مَا بُدِئَ بِهِ رَسُولُ اللهِ - صلى الله عليه وسلم - مِنْ الْوَحْيِ: الرُّؤْيَا الصَّادِقَةُ فِي النَّوْمِ، فَكَانَ لَا يَرَى رُؤْيَا إِلَّا جَاءَتْ مِثْلَ فَلَقِ الصُّبْحِ

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களுக்கு இறையறிவிப்பு (வஹ்யி) தொடக்கம் பெறத் தொடங்கியது, தூக்கத்தில் ஏற்படும் நல்ல கனவின் மூலம் தான். அதிகாலை வெளிச்சம் பளிச்சிடுவதைப்போல் தான் அவர்கள் கனவு காணத் தொடங்கினார்கள். (புகாரீ 4671)

நபித்துவச் சூரியனின் பிரகாசத் தொடக்கம் அந்த நற்கனவின் வழியேதான் ஆரம்பித்தது என்பது கனவின் சிறப்புக்குத் தக்கதொரு சாட்சியாக இருக்கிறது. ஹாஃபிழ் இப்னு ஹஜர் ﵀ கூறுகிறார்: இப்னு அபூ ஜம்ரா கூறினார், 'அந்த முதல் வஹ்யியை அதிகாலை விடியலோடு ஒப்பிட்டுச் சொன்னதற்குக் காரணம், நபித்துவம் (நுபுவ்வத்) என்ற சூரியன் கனவு என்ற சூரியக்கதிர்களிலிருந்துதான் தொடக்கம் பெறுகிறது. பிறகு நேரம் போகப் போகத்தான் சூரியனை நாம் பார்க்க முடிகிறது. கூடவே, சூரியனின் பிரகாசமும் கூடுகிறது.

இவ்வாறுதான் யாருடைய (உள்ளத்தின்) உட்பகுதி ஒளிமயமாக இருக்குமோ அவர் அபூ பக்ர் ﵁ அவர்களைப்போல உண்மைப் படுத்தும் விசயத்தில் முதல் நபராக இருப்பார். யாருடைய உட்பகுதி இருள்மயமாக இருக்குமோ அவர் அபூ ஜஹ்லைப்போல பொய்ப் படுத்தும் விசயத்தில் (வவ்வாலாக) தலைகீழாக இருப்பார். இதர மக்கள் இந்த இருவருக்கும் இடைப்பட்டவர்கள்தான். ஆக, ஒவ்வொருவரும் அவரவருக்குக் கொடுக்கப்பட்ட ஒளிச்சுடரின் அளவைப் பொறுத்தே தமது அந்தஸ்துகளைப் பெறுகின்றனர்.[12]

---

12 ஃபத்ஹுல்பாரீ 12/355.

3

கனவின் ஒழுக்கங்கள்

✿

இத்தலைப்பு அணுகும் மூன்று முக்கிய அம்சங்கள்

1. தமது கனவு உண்மையான கனவாக மாற ஒரு முஸ்லிம் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள்

2. கனவு கண்டவர் பேண வேண்டிய ஒழுக்கங்கள்

3. கனவுக்கு விளக்கம் சொல்பவர் கவனிக்க வேண்டிய ஒழுக்கங்கள்

3.1 நல்ல கனவுக்கான நல்லொழுக்கங்கள்

1. பேச்சில் உண்மை வேண்டும்

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

فِي آخِرِ الزَّمَانِ لَا تَكَادُ رُؤْيَا الْمُؤْمِنِ تَكْذِبُ، وَأَصْدَقُكُمْ رُؤْيَا أَصْدَقُكُمْ حَدِيثًا

கடைசி நேரத்தில் (காணப்படும்) ஒரு மூஃமினின் கனவு பொய்ப் பிக்கப்படாது. அவர்களில் மிக உண்மை பேசுபவர் கனவிலும் மிக உண்மையானவர் ஆவார். (அறிவிப்பு: அபூ ஹுறைறா ؓ, முஸ்னது அஹ்மது 7642)

இமாம் இப்னு ஹஜர் ؒ அவர்கள் 'ஆகிருஸ் ஸமான் – கடைசி நேரம்' என்பதற்கு மூன்று விளக்கங்களைக் கூறியுள்ளார்கள்.

ஒன்று: மார்க்க அறிஞர்கள் மரணித்துச் செல்லச் செல்ல மார்க்க விசயங்கள் சார்ந்த கல்வி முற்றிலுமாக குறைந்து போய்விடவில்லை. இந்த நேரத்தில்தான் இச்சமுதாயத்தின் நபித்துவக் கல்வி குறுக்கிட்டது. சற்று அணைந்து போன அந்தக் கல்வி மெய்யான இந்தக் கனவுகளின் மூலமாக அவர்களுக்கு ஈடுசெய்யப்படும்.

இரண்டு: மூஃமின்களின் எண்ணிக்கை குறையக் குறைய இறை மறுப்பு, அறியாமை, பாவம் என்று பலதும் இருப்பவர்களிடம்

கனவைக் கேட்கிறேன். பொய்யில்லாத உண்மையான கனவைக் கேட்கிறேன். இடையூறில்லாத பயனுள்ள கனவைக் கேட்கிறேன்.'

3.2. கனவு கண்டவரின் ஒழுக்கங்கள்

1. ஒருவர் கனவில் வெறுப்பான, ஷைத்தானிய தீண்டுதல்களைக் கண்டால், உடனே அவர் எழுந்து இடதுபுறம் மூன்று முறை ஊதிக்கொள்ளட்டும். அக்கனவின் தீமைகளைவிட்டும், ஷைத்தானின் தீமைகளைவிட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடிக் கொள்ளட்டும். பிறகு திரும்பி மறுபக்கத்தில் படுத்துக்கொள்ளட்டும். முடிந்தால் உடனே எழுந்து தொழுதுகொள்ளட்டும். அது மிகவும் நன்மைக்குரியது; நல்லது. இந்தக் கனவைப் பற்றி யாரிடமும் பேச வேண்டாம். அல்லாஹ்வின் கட்டளைப்படி அக்கனவு அவரை ஒன்றும் செய்யாது.

அபூ கதாதா ﷺ அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. அல் லாஹ்வின் தூதர் ﷺ கூற நான் கேட்டேன்:

الرُّؤْيَا مِنَ اللَّهِ وَالْحُلْمُ مِنَ الشَّيْطَانِ فَإِذَا رَأَى أَحَدُكُمْ شَيْئًا يَكْرَهُهُ فَلْيَنْفُثْ عَنْ يَسَارِهِ ثَلاَثَ مَرَّاتٍ ثُمَّ لْيَتَعَوَّذْ مِنْ شَرِّهَا فَإِنَّهَا لاَ تَضُرُّهُ

நல்ல கனவு அல்லாஹ்விடமிருந்து வருதாகும். தீய கனவு ஷைத்தானிடமிருந்து வருதாகும். உங்களில் ஒருவர் அவர் வெறுக் கும் ஏதோ ஒன்றைக் கண்டால், தமது இடது புறத்தில் மூன்று முறை ஊதிக்கொள்ளட்டும். அக்கனவின் கெடுதியைவிட்டும், ஷைத்தானின் தீமையைவிட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடிக்கொள்ளட்டும். (புகாரீ 5747, சுனனு அபீ தாவூது 5023)

இமாம் நவவீ ﷺ கூறுகிறார்கள்: வேறு சில அறிவிப்புகளில் மூன்று முறை துப்பிக்கொள்ளட்டும், உமிழட்டும் என்று வந்திருக்கிறது.

فَلْيَبْصُقْ عَلَى يَسَارِهِ، حِينَ يَهُبُّ مِنْ نَوْمِهِ، ثَلَاثَ مَرَّاتٍ

அவர் உறக்கத்திலிருந்து விழித்தெழுந்ததும் தமது இடப்பக்கத்தில் மூன்று முறை துப்பட்டும். (முஸ்லிம் 2261)

فَلْيَتْفُلْ عَنْ يَسَارِهِ ثَلَاثًا, وَلْيَتَعَوَّذْ بِاللهِ مِنْ شَرِّهَا، وَلاَ يُحَدِّثْ بِهَا أَحَدًا فَإِنَّهَا لَنْ تَضُرَّهُ

தமது இடப்பக்கத்தில் மூன்று முறை துப்பட்டும். பின்பு, அந்த கனவின் தீங்கைவிட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடட்டும். பின்பு அந்தக் கனவை ஒருவரிடமும் கூற வேண்டாம். (இவ்வாறு

சுபுஹ் தொழுகைக்குப் பிறகு கனவுக்கு விளக்கம் கூறுதல் என்று இமாம் புகாரீ ﵀ தமது நூலில் தலைப்பிட்டுள்ளார்கள். அந்தப் பாடத்தில் ஸமுரா இப்னு ஜீன்துப் ﵁ அவர்களின் நபிமொழியைக் கொண்டுவந்துள்ளார்கள். ஆனால், இது நமது பாடத் தலைப்பிற்கு அவ்வளவு பொருத்தமாக இல்லை. எனினும், இதுபற்றிய வேறு வேறு நபிமொழிகளை ஆராய்ந்து பார்க்க இது தூண்டுகிறது என்று கூறலாம்.

வஹப் இப்னு ஜரீர் ﵀ அவர்கள் அறிவிப்பில் 'சுப்ஹைத் தொழுதால்' என்று வந்துள்ளது. இதுவே இப்பாடத் தலைப்பிற்குப் பொருத்தமானது.

அல்மிஹ்லப் கூறுகிறார்: மற்ற நேரங்களைவிட சுபுஹ் நேரத்தில் கனவுக்கு விளக்கம் கூறுவதுதான் மிக ஏற்றமானது. ஏனெனில், கனவு கண்டவருக்கு அந்நேரம்தான் சமீபமானதாகும்; மனனம் உள்ளதுமாகும். மறதி குறுக்கிடாமலும் இருக்கும். கனவைச் சொல்பவரின் உள்ளமும் ஒரே மனநிலையில் இருக்கும். உலகச் சிந்தனைகளின் ஈடுபாடும் குறைவாக இருக்கும்.

கனவு காண்பவர் தாம் காண்பதைக் கொண்டு அறித்துகொள்ளட்டும். நல்லதைக் கண்டு சுபச்செய்தியையும், தீயதைக் கண்டால் ஒரு முன்னெச்சரிக்கையையும் பெற்றுக்கொள்ளட்டும். இதற்காக அவன் எப்போதும் (தன்னை) தயாராக வைத்துக்கொள்ளட்டும். சில வேளை அவனது பாவத்திற்கான எச்சரிக்கையும் இருக்கலாம். அப்படியிருந்தால், அதைவிட்டும் விலகட்டும். சில வேளை சில காரியங்களுக்கான முன்னறிவிப்புகளும் இருக்கலாம். அப்படியிருப்பின் அதில் மிகக் கண்காணிப்புடன் இருக்கட்டும்.

பகலின் ஆரம்பத்தில் (பஜ்ரில்) நாம் கனவு காண்பதற்குக் கிடைக்கப் பெறும் சில விளக்கங்களின் பலன்கள்தான் இவை.

3.3. கனவுக்கு விளக்கம் கூறுபவர்களின் ஒழுக்கங்கள்

1. கனவுக்கு விளக்கம் சொல்பவர் முதலில் அவர் எல்லா நிலைகளிலும் தூய்மையானவராக, பேணுதல் உள்ளவராக, இறையச்சமுள்ளவராக இருக்க வேண்டும். இதர கல்விகளைப் போலவே இந்தக் கனவுகளின் விளக்கங்களுக்கான கல்விக்கும் அல்லாஹ் அதற்கென சில நபிமார்களையும் நல்லோர்களையும் தேர்ந்தெடுத்துள்ளான். இக்கருத்தைப் பின்வரும் வசனம் உணர்த்துகிறது:

4

கனவுகளின் வகைகளும் அதன் விளக்கங்களும்

✿

இமாம் அல்பகவீ ﵀ கூறுகிறார்கள்: கனவுகளின் விளக்கங்கள் பலவகை உண்டு:

- குர்ஆனின் வழியாக வந்தவை.
- ஹதீஸின் வழியாக வந்தவை.
- வாய்மொழியின் வழியாக வந்தவை.
- பெயர் மற்றும் அதன் அர்த்தங்கள் வழியாக வந்தவை.
- கண்ட கனவுக்கு முரணாகவும், மாற்றமாகவும் வந்தவை.

இனி இவற்றையெல்லாம் குர்ஆன், ஹதீஸ்களுக்கு விரிவுரை எழுதியுள்ள இமாம்களின் கருத்துகள் வழியே உதாரணங்களுடன் விவரிப்போம். இதைப் படிப்போர் இதையே பின்தொடரவும் வேண்டுகிறோம். அனைத்து கனவுகளுக்கும் விளக்கம் கூறுவது என்பது மிகவும் சிரமமான ஒன்றுதான். எனினும், இதுகுறித்து மிகப் பிரபலமான பல்வேறு நூல்கள் வெளிவந்துள்ளன. குறிப்பாக, அப்துல் கனி அந்நாபிலிசீ அல்ஹனஃபீ ﵀ அவர்களின் தஅதீருல் அனாம் என்ற நூலும் முஹம்மது இப்னு சீரீன் ﵀ அவர்களின் அத்தஃப்சீருல் கபீர் என்ற நூலும் முக்கியமானவை. குர்ஆன், ஹதீஸிலிருந்து பெறப்பட்ட சரியான ஆதாரங்களிலிருந்தும், தெளிவான உதாரணங்களிலிருந்தும், அனைவராலும் போற்றத்தக்க இமாம்களின் இனிய விளக்கங்களின் வழியாகவும் இங்கு நாம் இந்நூலின் கருவை கொண்டு வந்துள்ளோம். இதில் பலவீன மானவர்களின் மற்றும் அறியாமையில் உள்ளவர்களின் சொற்களை நாம் பொருட்படுத்தவே இல்லை. காரணம், கனவுகளுக்கான விளக்கம் என்பது அது நபித்துவத்தின் ஒரு பகுதி என்றல்லவா நபி ﷺ அவர்கள் அறிவித்துச் சென்றுள்ளார்கள்? அதை நாம் கண்ணியப்படுத்த வேண்டுமல்லவா?

إِنَّا مُرْسِلُو النَّاقَةِ فِتْنَةً لَهُمْ

நிச்சயமாக நாம் அவர்களுக்குச் சோதனையாக ஒரு பெண் ஒட்டகத்தை அனுப்பிவைப்போம். (குர்ஆன் 54:27)

அன்பளிப்பு - மகிழ்ச்சியை குறிக்கும்.

بَلْ أَنْتُمْ بِهَدِيَّتِكُمْ تَفْرَحُونَ

எனினும் நீங்கள் உங்களுடைய அன்பளிப்பைக் கொண்டு மகிழ்ச்சியடைகிறீர்கள். (குர்ஆன் 27:36)

மோசடி - ஹறாமான சம்பாத்தியத்தைக் குறிக்கும்.

وَمَا كَانَ لِنَبِيٍّ أَنْ يَغُلَّ وَمَنْ يَغْلُلْ يَأْتِ بِمَا غَلَّ يَوْمَ الْقِيَامَةِ

எந்த நபிக்கும் அவர் மோசம் செய்வது தகுமானதல்ல. எவர் மோசம் செய்கிறாரோ அவர் மோசம் செய்ததை மறுமைநாளில் (சுமந்து) கொண்டு வருவார். (குர்ஆன் 3:161)

2. ஹதீஸ்களின் வழியாக வந்துள்ள கனவுகளின் விளக்கங்கள் சில

இமாம் பகவீ ﵀ கூறுகிறார்: காகத்திற்கு கெட்டவன் என்றும், எலிக்கு கெட்டவள் என்றும் விளக்கம் கூறப்படும். ஏனெனில், நபி ﷺ அவர்கள் இவ்விரண்டையும் ஃபாசிக் – தீயது என்ற சொற்களால் குறிப்பிட்டுள்ளார்கள் இவ்வாறுதான் ஹதீஸ்களில் இருந்து விளக்கம் பெறப்படுகிறது. விலா எலும்பு பெண்ணைக் குறிக்கும். அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

الْمَرْأَةُ خُلِقَتٍ مِنْ ضِلَعٍ أَعْوَجَ

பெண் கோணலான விலா எலும்பிலிருந்து படைக்கப்பட்டவள். (அறிவிப்பு: அபூ ஹுறைறா ﵁, முஸ்தத்ரக் அல்ஹாகிம் 7334, புகாரீ 3153)

- கண்ணாடி (ஜாடி) பெண்ணைக் குறிக்கும்.

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்:

يَا أَنْجَشَةُ رُوَيْدًا سَوْقَكَ بِالْقَوَارِيرِ

அன்ஜஷாவே, ஒட்டகங்களின் மேல் உள்ள கண்ணாடிகளில் (அதாவது பெண்களில்) கவனமாக இரு. (அறிவிப்பு: அனஸ் இப்னு மாலிக் ﵁, முஸ்லிம் 2323)